12.12.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 107/2018</u>

அ.சா.11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | | |
| த/பெ | ஏழுமலை | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 55/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன முருகன் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். வீரம்மாள் எனது தம்பி மனைவி ஆவார். எனக்கு ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவம் அன்று நான் விவசாய வேலை செய்ய சென்று விட்டேன். தம்பி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு வந்து அங்கு பார்த்த போது அங்கு யாரும் இல்லை. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் எதுவும் சொல்லவில்லை. அதன் பிறகு மருத்துவமனையில் சென்று பார்த்தோம். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தோம். என்னை இது குறித்து காவல் துறையினர் விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. (சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் என் அண்ணன் அ.சா.1 சீனுவாசன் நடந்த சம்பவத்தை என்னிடம் சொன்னதை நான் அப்படியே போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றும், என் அண்ணன் நேரில் பார்த்த உண்மைகளை தான் என்னிடம் சொன்னார் என்றும் எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் தம்பி முருகன் வீட்டிற்கு சென்றதை நேரில் பார்த்ததாகவும், எதிரிகள் முருகன் தன் வீட்டின் முன்பு திண்னணயில் படுத்திருந்தபோது எதிரிகள் சூழ்ந்துக்கொண்டதாகவும், அன்பரசன், முருகன் தலையையும், சத்தியசீலன், புகழேந்தி கால்களையும், கோபாலகிரு ஷ்ணன் கைகளை அழுத்திக்கொண்டார் என்றும், பிரதாப், சிலம்பரசன், அசோக்குமார் கத்தியுடனும், சிவக்குமார், வினாயகமூர்த்தி, தடிகளுடனும் அவனை விடாதீங்கடா வெட்டுங்களா என்று தூண்டி விட ராதாகிருஷ்ணன், வீரபத்திரன், ரகு ஆகிய மூவரும் தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டி நீ உயிருடன் இருந்தால் தானே சாட்சி சொல்வாய் என்று முருகனின் கழுத்தில் மாறி மாறி வெட்டினார்கள் என்றும் அ.சா.1 சீனுவாசன் சொன்ன சங்கதிகளை காவல் துறையினர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>இல்லை.</u>

<u>மறுவிசாரணை இல்லை</u>